
விஜயாவின்
சந்திர ஹாரம்

வாழ்க்கைக்கு வழிகாட்டி!
இல்லறத்திற்குத் திறவுகோல்!

எஸ்.எஸ். வாஸன்
எழுதிய

# தம்பதிகள்

## சுகமாய் வாழ்வதெப்படி?

குடும்பத்தினர் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்
பரிசளிப்பதற்கேற்ற அழகிய கிளேஸ் பதிப்பு

விலை 3-12-0

ஒவ்வொரு ஆணும் பெண்ணும்
தெரிந்திருக்கவேண்டிய பல
அபூர்வ விஷயங்கள் அடங்கியது

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1

# கதைச் சுருக்கம்

அதிர்ஷ்டசாலியை அசைக்கவும் முடியாது. அதிர்ஷ்டக் கட்டையைக் கைதூக்கி விடவும் முடியாது.

சந்தன தேசத்து மன்னனுக்கு ஆண் குழந்தை இல்லாதிருந்து, இறுதியில் சந்தன் சந்திரஹாரத்துடன் பிறந்தான். அந்த ஹாரத்திலேதான் அவனது உயிர்நிலை அடங்கியிருந்தது. ஐந்தாண்டு நிறைந்ததும் குலவழக்கப்படி சகல வித்தைகளையும் கற்று வாலிபனானான் சந்தன். சந்தனுக்கு இவ்வயதில் மணமாகாவிட்டால் மரணம் ஏற்படுமென்பதறிந்து பெற்றோர்கள் சகல தேசத்தரசகுமாரிகளின் ஓவியங்களையும் வரவழைத்து, சந்தனின் சம்மதத்தைக் கேட்க, சந்தன் தான் ஓவியத்தில் தன் கற்பனையில் வடித்தெழுதியுள்ள, பெண்ணைதான் மணப்பேனென்று உறுதியாகக் கூற, அப்படிப்பட்ட பெண் எங்கிருந்தாலும் கண்டு பிடித்து சந்தனுக்கு மணமுடித்து வரும்படி மாலியிடம் கூறி, மாலியையும் சந்தனையும் தேசயாத்திரைக்கு அனுப்பினார் அரசர்.

சந்திரனுக்கு மணமாகாவிடில் மரணமடைவான், தான் அரியாசனம் ஏறலாம் எனும் ஆசையில், அரசனின் மருமகன் வக்ரகேது, தாண்டவராயன் எனும் சூழ்ச்சிக்காரனை சந்தனை பின்தொடரச் செய்தான். அந்த ஓவியசுந்தரியின் பெயர் கௌரி. மாற்றாந்தாயின் கொடுமையின்கீழ் வாழும் அவளை தாண்டவராயன் ஓர் பைத்தியத்திற்கு மணமுடிக்க ஏற்பாடு செய்தான். ஆனால் கௌரியின் தந்தைக்கு இவ்விவாகம் சம்மதமில்லாததால், தன் அன்பு மகளை அனாதையாய் வெளியிலனுப்பிவிட்டார். நாடு திரும்பிய சந்தனை, சஞ்சலா எனும் தேவமாது கண்டு, காதல் கொண்டு, தன்னை மணக்கும்படி வேண்ட சந்தன் அவளை நிராகரிக்கவே, ஆத்திரமடைந்து அவன் கழுத்திலுள்ள சந்திரஹாரத்தை அபகரித்துச் சென்றாள். ஹாரம் போனதும் இறந்தான் சந்தன். ஆயினும் பிரதி நள்ளிரவில், இரண்டு நாழிகை உயிர்வாழ அனுக்கிரகித்தாள்.

கௌரியின்மீது கருணைகொண்டு, சஞ்சலாவின் மூத்த சகோதரி அசலா, அவளை சந்தனிடம் சேர்ப்பித்தாள். மூர்ச்சையிலிருந்து விடுபட்ட சந்தனுக்கும், கௌரிக்கும் மணம் நடத்தி மகிழ்ந்தார் மாலி. சந்தன் தினசரி நள்ளிரவில் இரு நாழிகை உயிர்பெற்றெழும் இரகசியம் மாலி, கௌரி இருவர்களைத் தவிர வேறு யாரும் அறியார்கள். இந்நிலையில் அரசர், வக்ரகேதுவிற்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தார்.

ஒருநாள் தாண்டவராயன் மாலி வீட்டிற்குச் செல்ல, அங்கே கௌரியைக் கண்டான். அவள் இரகசியமாய் ஊருக்கப்பாலுள்ள ஓர் ஆலயத்திற்கு மாலியின் உதவியால் சென்றுள். தன் மரண நிலையிலிருந்து நள்ளிரவில் விடுபட்ட சந்தன் ரகஸ்ய பாதை வழியே, அந்த இடத்திற்குச் செல்ல, தாண்டவராயனும், வக்ர கேதுவும் அவனை பின்தொடர்ந்தனர்

சந்தன் தன் ஆணையை மீறியதால் வெகுண்ட சஞ்சலா சந்தனின் ஆவியை வாங்கிச் செல்கிறுள். இவ்வாறு இறந்து போன சந்தனுடன் கூடவே, அவன் மனைவி கௌரியும் உடன் கட்டை ஏறட்டுமென்று உத்தரவிட்டான் வக்ரகேது.

சஞ்சலா தோல்வி அடைந்தாளா?

வக்ரகேது, தாண்டவராயன் சூழ்ச்சி வெற்றி பெற்றதா?

சந்தன், கௌரி முடிவென்ன?

என்பவைகளை வெள்ளித்திரையில் கண்டு மகிழுங்கள்.

---

## நடிகர்கள்

என். டி. ராமராவ், எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி, ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி, பாலகிருஷ்ண, பத்மநாபன், சர்மா மற்றும் பலர்.

வசனம் பாடல்கள்:

**தஞ்சை ராமையாதாஸ்**

சங்கீதம்: **கண்டசாலா**

மேற்பார்வை : **பிரசாத்**

**டைரக்ஷன் : கே. காமேஸ்வரராவ் பி.ஏ.,**

தயாரிப்பு :

**நாகிரெட்டி — சக்ரபாணி**

# சந்திரஹாரம் பாட்டுகள்

### 1. அருட்பா

அருட்ஜோதி தெய்வம் எனை
ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்
பொருட்சாரும் மறைகளெலாம்
போற்றுகின்ற தெய்வம்
போதாந்த தெய்வம் உயர் நாதாந்த தெய்வம்
இருட்பாடு நீக்கி ஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணியவா
றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும்
சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம் (அருட்)

### 2. பின்னணி

லாலீ ஜெய லாலீ-லாலீ சுப லாலீ
கற்பகமே எங்கள் கனிரசமே
காவியமே உயிர் ஓவியமே
சத்குரு நாதனின் ஆசியை தினமே
தவழ்ந்திடும் அனுகிரஹமே
அடைந்திடுவாய் செல்வமே (லாலி)

மாலி—வனமாலி—குருகுல சந்தன்மாலி
மாதவ பயனால் பிறந்தவன் அன்றோ
மகிதலம் புகழ்ந்திடும் சுதன் அன்றோ
ஆதரவுடனே வளர்ந்திடும் கடமையும்
யாவும் நீ தானே மாலி (லாலி)

தவமே—மாதவமே—இதுமறை புகழ்
பொன் மொழி நீ உணர்வாய்
நிலை இழந்தவரும் நிம்மதி பெறவே
நிழலை தந்திடும் எழில் வனம்போல்
உலகக்ஷேமம் பெற உயிர் வாழ்ந்திடவே
உண்மையை உணர்ந்திடும் மர்மமிதே (லாவி)

### 3. சந்தன்

எனதாருயிர் வனிதாமணி என் மனோன்மணி
இணையில்லாத புனிதவதனி
இவளே எந்தன் இதயராணி
மனதில் கனிந்த ஆவல் மீறி
மலர்ந்திடும் எழில் சுகுண சுந்தரி (என)

குமுத மலரின் சாயலாலே
குளிர்ந்த காதல் பார்வையாலே
அமுதநிலையின் கலையினாலே
கவர்ந்திடும் எழில் கற்பனை சுந்தரி (என)

### 4. கௌரி

அருள் புரிவாய் அம்மா (நீ)
அன்பெனும் ஜோதியாய்
அமர்ந்ததும் நீயே
இன்பமே தந்திடும் தாயே (அருள்)

கற்பெனும் நிலையே தவறுதெனையே
கனவிலும் நீயே துணை புரிவாயே
கதி வேறில்லையே தாயே (அருள்)

கறவை தனை இழந்த கன்றினம்போலே
கதறுகின்றேனே கலங்கி நின்றேனே
கருணை செய்வாயே தாயே (அருள்)

அம்மா உன்னைபோல்—புவிமேல் நானே
அருங்குணவதியாய் வாழ்ந்திடத்தானே
அடி பணிந்தேனே—தாயே (அருள்)

5. சந்திரனும்—அல்லிப் பெண்களும்

அலைகள் சயனமேல்
கனவு காண்பதேன்—ஓ
அமுத குமுத மணிகளே
யாரே—யாரே
ஜில்லெனும் நிலவை உள்ளமே குளிர
அள்ளி வீசியது (யாரே-யாரே)

நளினமேவும் குமுதராணி வாராயோ
நகையுலாவும் தேன்மலரே
நாட்டியமாட வாராயோ (யாரே-யாரே)

வாரீர் கலைராஜன் எழில் காணவாரீர்
பரிமளமணம் வீசும் மலர் தூவவாரீர்
யதிராஜன் பதம்சேர துதிசெய்யவாரீர்
(யாரே-யாரே)

6. பின்னணி

எது செய்தால் அது பெருங்கார்யம் (நாம்)
அது பெருங்கார்யம்
நானும் சொன்னதே உனக்கு புரியாமே
நீயும் சொன்னதே எனக்குத் தெரியாமே
நமக்குள் பேசியது நமக்கு விளங்காமே
கிலிபிலி கிலிபிலி கலிபிலியா
சொன்னலொன்றுமே அதை செய்யாமே
செய்தாலொன்றுமே அதை சொல்லாமே
சொல்லி செய்ததே அது நடக்காதே
கிலிபிலி கலிபிலி கஜீபிஜியா
அவன் சிண்டை முடி இவனுக்கு போட்டு
இவன் சிண்டை முடி அவனுக்கு போட்டு
அவனும் இவனும் அடிபட்டு ஓடவே
கஜிபிஜி கிஜிபிஜி—கடபிடயா (எது

7. சந்தன்

சகீ ...பிரியசகி - கனவு பலிக்குமோ ஓ-சகீ...
வாழ்விலே கனவு பலிக்குமோ பிரியசகி
வாழ்விலே கனவு பலிக்குமோ
நீலமேக வானகமேல்
ஜாலம் செய்யும் மின்மினியோ
வாழ்வில் இன்பக் கலையினாலே
வலை வீசும் தாரகையோ (பிரிய)

கனவிலே உன் நினைவினாலே
மனமே நிலை இழந்ததாலே
இனியாகிலும் நீயே புவியில்
எனைக் காணவே வருவாயோ (பிரிய)

8. சஞ்சலா

காதல் மேவும் கானத்திலே
கனியும் ஆசை தியானத்திலே
கனவு பலிக்க அன்பே நமது
மனம்போலவே வாழ்ந்திடுவோம்
ராஜா—பிரிய ராஜா

9. மாலி

விதியே உன் லீலை இதுவோ மனிதன் ஒரு
விளையாட்டுப் பொம்மையோ
வீண்மாயை தானோ
ஜனனமுதல் மரணமும் சுகதுக்கம் யாவுமே
சகடயென சுற்றிவர விகடமே செய்வதேன்
புவனமதில் மாளாத மூவாசை கடலிலே
சவமாகும் மானிடரை சதிசெய்வதேனோ
காயோடு கனியோடு பூ பிஞ்சு வாழ்விலே
காலனும் தூதுவர ஜாலமே செய்வதேன்
காயாபுரிக்கோட்டை கற்கோட்டை அல்லவே
கணத்திலே உடல்வேறு, உயிர்வேறு செய்வதேன்

### 10. பின்னணி கீதம்

உனக்கு நீயே துணையென்றே
லோகயாத்திரை செய்வதேன்
பாரில் தந்தை தாயும் பிள்ளையும்
யாருக்காரு ஓ அம்மா
மனது நல்லதானால் போதும்
அகிலமே உன் இல்லமே
ஜெகத்தில் நடக்கும் துயரை நினைந்து
திகிலும் அடைவதேனம்மா
சகல சாக்ஷி சர்வேஸ்வரன்
கருணை காட்டமாட்டானா
லோகயாத்திரை செய்வதேன்—மாதா
உனக்கு நீயே துணையென்றே
லோகயாத்திரை செய்வதேன்

### 11. சந்தன்

என்ன சிக்ஷை உனக்கு வேண்டும்
வேண்டிக்கொள் என் நாயகி
புன்னகையால் பொன்மொழியால்
மின்னும் ஆசையால்
அந்தரங்கம் நீ உணர்ந்து
ஆசையாக வேஷமணிந்து
அன்னம்போலே நடை நடந்து
என் அருகில் வந்ததாலே.
பாலை மேவும் கானலிலே
பாயுந்தென்றல் ஜீவநதி
வாழ்வினிலே வசந்தகால
மலரைப்போலே மலர்ந்ததாலே (என்ன

### 12. கௌரி

தயவில்லையோ என் குறை கேளாயோ
தயாபரி அல்லவோ மாதா (தய

எந்த துயர்தனிலும் யார் நினைத்தாலும்
எந்த ஆபத்திலும் யார் அழைத்தாலும்
அபயதான செல்வி நீயே மாதா (தய)

பதிதரை பாபியை பாமரமாந்தரை
உன துதித்திடவே அறியா பிராணியை
காத்து அருள் புரியும் ஏ ஜெகன்மாதா (தய)

**13.** கௌளி

ஜெகமீதில் அலைமோதும் திக்கற்ற மாந்தரின்
தீராத வினை தீர்க்கும் தேவர்களே
தீதான துயரோடு உயிர் வாழும் பிராணிகளை
தேடியே ரக்ஷிக்கும் தேவதைகளே
ஜீவராசிகள் நித்திய ஜீவித லீலையின்
மூலகாரணமான மும்மூர்த்திகளே
ஜெகத்திலே என் நாளும் சாந்தியே நிலவிட
தியானமே செய்யும் ஓ—மஹரிஷிகளே
நான் ஒரு அனாதை அன்றோ—இனி
யாரேனும் மனமிரங்கி—இந்த அதர்மத்தை
தடுப்பதென்றோ
நெறியான வாழ்விற்கு வழிகாட்டும்ஆன்றோர்களே
நீதியை வழங்கிடும் ஓ—அமரர்களே
ஆபத்தில் வீழ்ந்து அபலையாய் வேண்டிநிற்கும்
எந்த பாவியையும் ரக்ஷிக்கவில்லையோ
சகல லோகேஸ்வரி ஜெகத்ஜனனி
இனி—நீயே தஞ்சம் அம்மா
நின் பாதமே சரணமம்மா
நின் தயவில்லையோ—மாதா
தயவில்லையோ — மாதா
சரணமே மாதா—சரணமே மாதா
மாதா—மாதா—மாதா

சுபம்!

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

## அறிஞர்கள் சிந்திய

## அமுதத் துளிகள்

| | |
|---|---|
| தாகூர் முத்துக்குவியல் | 0 8 0 |
| லெனின் பொன்மொழிகள் | 0 8 0 |
| இங்கர்சால் அறிவுரைகள் | 0 8 0 |
| விவேகானந்தர் வீரவுரைகள் | 0 8 0 |
| இராமகிருஷ்ணர் அருள்மொழிகள் | 0 8 0 |
| இயேசுநாதர் அருள்வாக்குகள் | 0 8 0 |
| கம்பர் கற்பனைகள் | 0 8 0 |
| கீதை உபதேசமொழிகள் | 0 8 0 |
| ஷேக்ஸ்பியர் வர்ணனைகள் | 0 8 0 |
| ஸ்டாலின் புரட்சிமொழிகள் | 0 8 0 |
| வள்ளலார் வாய்மொழிகள் | 0 8 0 |
| அண்ணாவின் உவமைகள் | 0 8 0 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | 0 8 0 |
| திருக்குறள் | 0 8 0 |
| மாஜினி மணிமொழிகள் | 0 8 0 |

கலைமன்றம்

சென்னை - 1

இலக்கிய விருந்து! சிறந்த பதிப்பு!!

# திருக்குறள்

## விளக்கவுரை

உரையாசிரியர்

(வித்வான்-ஈ. சபாபதி முதலியார்)

திருவள்ளுவரின் குறளுக்கு விரிவான
இனிய தெளிவுரை!

பண்டிதர் முதல் பாமரர் வரை யாவரும்
படித்துப் பயன் பெறத் தக்க முறையில்
எளிய தமிழ் விளக்க வுரை!

மாணவர்களுக்கு உபயோகப்படத் தக்கதான
கையடக்கமான புத்தகப் பேழை!

வள்ளுவரின் மூவர்ண அட்டைப் படம்

விலை ரூ. 3—8—0

ஸ்ரீ மகள் கம்பெனி
122, வாதாமுத்தியப்பன் தெரு,
சென்னை-1